2005 செப்டம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, திரு. சந்தானம், குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

திரு. லா. சந்தானம்: இல்லை, இல்லை. நானும் ஒரு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, சொல்லுங்கள். அறிக்கையை அளித்துவிட்டு பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. லா. சந்தானம், அறிக்கைகள் அளித்தல்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 38–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 123, 124 மற்றும் 125 ஆகிய 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005–2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதம். (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, அது ஏற்கெனவே சொல்லி முடிந்து போய் விட்டது. முடிந்த பிரச்சினை அது. (குறுக்கீடு) திரு. எச். ராஜா. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே இதுபற்றி விவாதித்து முடிவு செய்யப்பட்டுவிட்டது, முடிந்துவிட்டது அது. (குறுக்கீடுகள்) அது முடிந்து, அடுத்த நிகழ்ச்சி எல்லாம், நன்றி எல்லாம் சொல்லி முடிந்தாகி விட்டது. (குறுக்கீடு) என்ன, திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.